12564



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** தெளிவாக எழுதுக.
* **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்

சுட்டெண் : ........................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| வினாத்தாள் I | |
|---|---|
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டு இல. |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |

**1.** வணிகம் என்பது,
(1) இலாபத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு மக்கள் குழுமம் ஆகும்.
(2) சேவைகளை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் ஆகும்.
(3) பொருட்களை விற்பனை செய்வதற்கான தனிப்பட்டவர்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட முயற்சி ஆகும்.
(4) பொருட்களை உற்பத்தி செய்வதற்காக தனிப்பட்டவர்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட முயற்சி ஆகும்.
(5) தனிப்பட்டவர்களது தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் ஆகும். (......)

**2.** இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வகைப்படுத்தலின் பிரகாரம் கைத்தொழில்துறைக்கு உரித்தான பொருளாதார நடவடிக்கை;
(1) மீன் சுழற்சி ஆகும். (2) சட்டப் பரிந்துரை (Legal advococy) ஆகும்.
(3) காப்புறுதி ஆகும். (4) மரக்கறி விதைகள் விற்பனை ஆகும்.
(5) காடு வளர்ப்பு ஆகும். (......)

**3.** உரிமையாளர்களுக்கு நியாயமான உழைப்பை பெற்றுக் கொடுப்பதற்கு நிறுவனங்களால் மேற்கொள்ளக்கூடிய ஒரு நேர் நடவடிக்கை யாது?
(1) கழிவுப்பொருட்களை முகாமை செய்தல்
(2) சமூக நலன்புரி சேவைகளைப் பூர்த்தி செய்தல்
(3) ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
(4) பயனுறுதியான முயற்சிகளில் பணத்தை முதலீடு செய்தல்
(5) பொருட்கள் சேவைகளுக்கான நியாயமான விலையைத் தீர்மானித்தல் (......)

**4.** நிலைபேறான பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு வணிகமொன்று பங்களிப்புச் செய்ய வேண்டியதாவது
(1) உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
(2) பொருட்களை இறக்குமதி செய்தல்
(3) வேலைவாய்ப்பை உருவாக்குதல்
(4) வருமானப் பங்கீட்டு சமநிலையைப் பேணுதல்
(5) உள்வாரியான விலை உறுதித்தன்மையை பேணுதல் (......)

**5.** இலங்கையில் மிகவும் பரவலாகக் காணப்படும் வணிக நிறுவன வகை யாது?
(1) பங்குடைமை (2) கூட்டுறவு
(3) வரையறுத்த பொதுக் கம்பனி (4) தனியுடைமை
(5) அங்கீகார வணிகங்கள் (......)

[ பக். 2 ஐப் பார்க்க

tamilguru.lk
More Past Papers at tamilguru.lk

**6.** பொதுப் பண்டங்களின் விலை அதிகரிக்கும்போது உற்பத்தியை குறைக்கும் சந்தர்ப்பத்தில் வணிகமொன்றின் விற்பனைப் புரள்விலும் இலாபத்திலும் உடனடியாக ஏற்படக்கூடிய விளைவு யாது?

| | விற்பனைப் புரள்வு | இலாபம் |
|---|---|---|
| (1) | குறையும் | அதிகரிக்கும் |
| (2) | அதிகரிக்கும் | குறையும் |
| (3) | மாற்றமில்லை | மாற்றமில்லை |
| (4) | குறையும் | குறையும் |
| (5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

More Past Papers at tamilguru.lk

(......)

**7.** முயற்சியாளர் ஒருவர் பாதீட்டைப் பயன்படுத்துவது
(1) நிதியியல் தேவைப்பாடுகளைக் குறைத்துக் கொள்வதற்காக
(2) ஊழியர்களுக்கு நிதியியல் தகவல்களை வழங்குவதற்காக
(3) வணிக செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக
(4) வணிகத்தின் நிதிப் பெறுபேற்றினைக் கண்காணிப்பதற்காக
(5) சமப்பாட்டுப் புள்ளியில் வெளியீட்டு மட்டத்தை இனங்காண்பதற்காக (......)

**8.** முயற்சியாளருடன் ஒப்பிடும்போது வணிகர் ஒருவர் மிகவும் விருப்பம் காட்டுவது
(1) இடர்களை ஏற்றுக் கொள்வதற்கு
(2) சகல பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்வதற்கு
(3) பாதுகாப்பாக செயற்படுவதற்கு
(4) ஆக்கத்திறன்களை அதிகரிப்பதற்கு
(5) புதிய வணிக வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்கு (......)

**9.** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது இலங்கை மத்திய வங்கியால் பயன்படுத்தப்படும் நாணயக் கொள்கை சார்ந்த கருவிகளையும் அவை தொடர்பான விவரணங்களையும் எடுத்துக் கூறுகிறது.

| கருவிகள் | விவரணங்கள் |
|---|---|
| (i) நிலையான வைப்பு வசதி வீதம் | A - இலங்கை மத்திய வங்கி அரசாங்கப் பிணைகளை நிலையான அல்லது தற்காலிக அடிப்படையில் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும் |
| (ii) திறந்த சந்தைச் செயற்பாடுகள் | B - வணிக வங்கிகளின் தற்காலிக திரவத்தன்மை நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக முற்பணங்களை அனுமதிப்பதில் மத்திய வங்கியால் விதிக்கப்படும் வட்டி வீதம். |
| (iii) சட்டரீதியான ஒதுக்கு வீதம் | C - வணிக வங்கிகள் அரசாங்க பிணைகளின் அடைமானத்தின் மூலம் நிதிகளைப் பெற்றுக்கொள்கின்றபோது மத்திய வங்கியால் அறவிடப்படும் வட்டி வீதம். |
| (iv) நிலையான கடன்வசதி வீதம் | D - வணிக வங்கிகளினால் தமது வைப்புக்களில் இருந்து மத்திய வங்கியில் பேணுமாறு வேண்டிக் கொள்ளப்படும் வைப்புத் தொகை. |
| (v) வங்கி வட்டி வீதம் | E - வணிக வங்கிகள் தமது மிகையான நிதிகளை அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்யும்போது மத்திய வங்கியால் செலுத்தப்படும் வட்டி வீதம். |

மேலே தரப்பட்டுள்ள கருவிகளின் ஒழுங்கமைவிற்கமைவாகச் சரியாகப் பொருந்தும் விவரணங்களின் தெரிவு யாது?
(1) A, C, D, E, B (2) C, D, A, B, E (3) C, D, A, E, B
(4) E, A, D, B, C (5) E, A, D, C, B (......)

**10.** **கூற்று A** : அரசாங்கத் துறையில் இருக்கும் சகல நிரந்தர ஊழியர்களுக்கும் அரச சேவை சேமலாப நிதியம் ஏற்புடையதாகும்.
**கூற்று B** : சகல தனியார்துறை ஊழியர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியம் ஏற்புடையதாகும்.
மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுகளிலும்
(1) **A** சரியானது **B** தவறானது.
(2) **A** தவறானது **B** சரியானது.
(3) **A** மற்றும் **B** ஆகிய இரண்டும் தவறானது.
(4) **A** யும் **B** யும் சரியானது என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படுகிறது.
(5) **A** யும் **B** யும் சரியானது என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படவில்லை. (......)

[ பக். 3 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**11.** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது காப்புறுதித் தத்துவங்களையும் அவை தொடர்பான விபரணங்களையும் எடுத்துக் கூறுகிறது.

| தத்துவங்கள் | விவரணங்கள் |
|---|---|
| (i) காப்புறுதி செய்யும் உரிமை | A - காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு சேதமேற்படுவதற்குக் காரணமான நேரடிச் சம்பவம் |
| (ii) இழப்பீடு | B - குறித்த விடயம் தொடர்பில் காப்புறுதி செய்வதற்கு காப்புறுதி செய்பவருக்குள்ள உண்மையான அக்கறை |
| (iii) மிக்குயர் நம்பிக்கை | C - காப்புறுதி செய்பவருக்குச் செலுத்திய இழப்பீட்டுக்கான கோரிக்கையை சேதத்துக்கு காரணமாக இருந்த மூன்றாம் தரப்பினர்களிடம் இருந்து வசூலித்துக் கொள்வதற்கான காப்புறுதி அளிப்பவருக்குள்ள உரிமை |
| (iv) அண்மைய காரணங்கள் | D - காப்புறுதி அளிப்போரும் காப்புறுதி செய்வோரும் காப்புறுதி உடன்படிக்கைக்குரிய சகல தகவல்களையும் வெளிப்படுத்துதல். |
| (v) பதிலாள் வைப்பு | E - உண்மையாக ஏற்பட்ட இழப்பீட்டுக்கு மாத்திரம் காப்புறுதி செய்பவருக்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல். |

மேலே தரப்பட்ட தத்துவங்களின் ஒழுங்கமைவிற்கமைவாக விவரணங்கள் சரியாகப் பொருந்தும் தெரிவு யாது?

(1) B, A, E, C, D (2) B, E, D, A, C (3) D, B, E, A, C
(4) D, E, A, C, B (5) E, A, D, C, B (......)

**12.** **கூற்று A** : முக்கியமானதும் சிக்கலானதுமான தகவல்களைக் கூட வாய்மொழிமூலம் தொடர்பாட முடியும்.
**கூற்று B** : வாய்மொழி மூலமான தொடர்பாடலுக்கு மேலதிகமாக அத்தகவல்களை எழுத்து மூலமாக தொடர்பாடல் செய்வது முக்கியமானதாகும்.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுக்களிலும்

(1) **A** சரியானது **B** தவறானது.
(2) **A** தவறானது **B** சரியானது.
(3) **A** மற்றும் **B** ஆகிய இரண்டும் தவறானது.
(4) **A** யும் **B** யும் சரியானது என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படுகிறது.
(5) **A** யும் **B** யும் சரியானது என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படவில்லை. (......)

More Past Papers at
tamilguru.lk

**13.** சில்லறை வியாபாரி ஒருவர் தனது பொருட்களை இணைய வழி ஊடாக விற்பனை செய்யும்போது அவரால் முதலில் செய்ய வேண்டியது

(1) கூடுதலான இருப்பைப் பேணுதல் வேண்டும்.
(2) வாடிக்கையாளரிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.
(3) ஒரு நிரந்தரமான வாடிக்கையாளர் தளத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
(4) உயர்வான வாடிக்கையாளர் கவர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
(5) எந்தவொரு நாட்டிலும் சந்தைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். (......)

**14.** முதல்வர் சார்பாக தனது சொந்தப் பெயரின் கீழ் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் முகவர்

(1) காரணிகர் ஆவார். (2) தரகர் ஆவார். (3) தரகு முகவர் ஆவார்.
(4) பொறுப்பு முகவர் ஆவார். (5) ஏலவர் ஆவார். (......)

**15.** பின்வருவன சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் கலவையில் பயன்படுத்தக்கூடிய சில கருவிகள் ஆகும்.

A - வெப்தளங்கள் B - விற்பனைக் கூட்டங்கள்
C - கண்காட்சிகள் D - விபரப்பட்டியல் (Catalogue)
E - தொலைபேசி அழைப்புக்கள் F - மாதிரிகள்
G - சமூக ஊடகம் H - ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

மேலே தரப்பட்டவற்றுள் நேர் சந்தைப்படுத்தலில் மட்டும் பயன்படுத்தக்கூடிய கருவிகளைக் கொண்டுள்ள தொகுதி எது?

(1) A, D, E, F (2) A, D, E, G (3) B, C, F, G
(4) C, D, E, G (5) C, F, G, H (......)

**16.** இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைந்து செல்வதனால்

(1) ஏற்றுமதிக் கட்டளைகள் அதிகரிக்கும். (2) ஏற்றுமதிப் பொருட்களின் விலை அதிகரிக்கும்.
(3) இறக்குமதிக் கட்டளைகள் அதிகரிக்கும். (4) இறக்குமதிப் பொருட்களின் விலை குறைவடையும்.
(5) ஏற்றுமதிக் கட்டளைகள் குறைவடையும். (......)

[ பக். 4 ஐப் பார்க்க

**17.** கீழே தரப்பட்டுள்ள வைத்தியசாலை முகாமைத்துவப் பணிகள் இரண்டின் ஒழுங்கிற்கு அமைவாக முகாமைத்துவத்தின் இரண்டு உப-வகிபாகங்கள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதைத் தெரிவுசெய்க

**A** - நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக வைத்தியசாலை ஊழியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

**B** - போதுமான அளவு சிகிச்சை வசதிகளை உறுதிப்படுத்தலும் பாதுகாப்பான மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளுதலும்

(1) தலைவரும் தொடர்புகளைப் பேணுபவரும்
(2) தகவல்களை வழங்குபவரும் தடைகளைக் கையாள்பவரும்
(3) முயற்சியாளரும் தொடர்புகளைப் பேணுபவரும்
(4) தொடர்புகளைப் பேணுபவரும் தகவல் வழங்குபவரும்
(5) தடைகளைக் கையாள்பவரும் கண்காணிப்பாளரும் (......)

**18.** நெருக்கடியான சூழ்நிலையின்போது நிறுவனமொன்று இணையவழி ஊடாக வீட்டில் இருந்து பணி செய்வதற்கான வசதியினை ஊழியர்களுக்கு வழங்குகிறது. இக்கூற்று மிகவும் சிறப்பாக எடுத்துக் காட்டுவது,

(1) திட்டமிடலின் முக்கியத்துவத்தினை ஆகும்.
(2) மாற்றமடையும் சூழலுக்கு இசைவாக்கம் அடைதலை ஆகும்.
(3) நிறுவனம் சார்ந்த பலவீனத்தைத் தவிர்த்தலை ஆகும்.
(4) முகாமைத்துவம் சார்ந்த பணிகளைக் கூட்டிணைத்தலை ஆகும்.
(5) தொழில்நுட்ப அறிவின் தேவைப்பாட்டை ஆகும். (......)

More Past Papers at
tamilguru.lk

**19.** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது தந்திரோபாயத் திட்டத்தில் உள்ளடங்கும் கூறுகளையும் அவை தொடர்பான விவரணங்களையும் காட்டி நிற்கின்றது.

| கூறுகள் | விவரணங்கள் |
|---|---|
| (i) இலட்சிய நோக்கு | A - நிறுவனத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிகாட்டும். |
| (ii) இலக்குகள் (Goals) | B - நிறுவனத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்குச் செய்யத் தேவையானவற்றை எடுத்துக் காட்டுகிறது. |
| (iii) தந்திரோபாயங்கள் | C - ஒரு பணியை அடைந்து கொள்வதற்கு பின்பற்றவேண்டிய படிமுறை வரிசைகளை எடுத்துக் காட்டுகின்றது. |
| (iv) கொள்கைகள் | D - நிறுவனமொன்று அடைந்து கொள்ளத் தேவையான நீண்டகால எதிர்பார்க்கைகளையும் ஆவலையும் எடுத்துக் காட்டுகின்றது. |
| (v) நடைமுறைகள் | E - நிறுவனமொன்றின் தன்மையினையும் அதன் வழியினையும் தீர்மானிக்கின்றது. |

மேலே தரப்பட்ட கூறுகளின் ஒழுங்கமைவிற்கு அமைவாக விவரணங்களின் சரியான ஒழுங்கினை எடுத்துக்காட்டும் தொகுதி யாது?

(1) A, D, E, C, B (2) A, E, D, B, C (3) C, D, A, B, E
(4) E, D, B, A, C (5) E, D, B, C, A (......)

**20.** கீழே தரப்பட்டுள்ள இரண்டு தீர்மானங்களினதும் ஒழுங்கிற்கமைவாக சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள தலைமைத்துவப் பாங்குகளை தெரிவுசெய்க.

**A** : ஊழியர்கள் அவர்களது பணிகளை நிறைவேற்றுவதற்கு முழுச் சுதந்திரமும் கட்டுப்பாடும் வழங்கப்படல்

**B** : அதிகாரப் பன்முகப்படுத்தலின் மூலம் ஊழியப் பங்குபற்றுதலை பெற்றுக்கொள்ளுதல்


(1) சர்வாதிகார தலைமைத்துவம், ஜனநாயக தலைமைத்துவம்
(2) ஜனநாயக தலைமைத்துவம், தலையிடாத் தலைமைத்துவம்
(3) ஜனநாயக தலைமைத்துவம், சர்வாதிகார தலைமைத்துவம்
(4) சர்வாதிகார தலைமைத்துவம், தலையிடாத் தலைமைத்துவம்
(5) தலையிடாத் தலைமைத்துவம், ஜனநாயக தலைமைத்துவம் (......)

**21.** செயற்பாட்டு முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளை மட்டும் உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) உற்பத்திப் பொறியியல், இருப்புக் கட்டுப்பாடு, உற்பத்திக் கட்டுப்பாடு, உற்பத்தித் திட்டமிடல்
(2) மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், நியமங்களை உருவாக்குதல், செயற்றிறனை அளவிடுதல், உற்பத்திக் கட்டுப்பாடு
(3) உற்பத்திப் பொறியியல், உற்பத்தித் திட்டமிடல், மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், உற்பத்திக் கட்டுப்பாடு
(4) உற்பத்திப் பொறியியல், அகக் கணக்காய்வு, இருப்புக் கட்டுப்பாடு, உற்பத்திக் கட்டுப்பாடு
(5) நியமங்களை உருவாக்குதல், செயற்றிறனை அளவிடுதல், வேறுபாடுகளை இனங்காணுதல், ஆய்வு அபிவிருத்தி (......)

[ பக். 5 ஐப் பார்க்க

**22.** கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் **A** மற்றும் **B** ஆகியவற்றின் மூலம் எடுத்துக் காட்டப்படுவது




More Past Papers at
tamilguru.lk

(1) நுகர்வோர் கேள்வி குறைதலும் சுழற்சிக் காலம் அதிகரித்தலும்
(2) நுகர்வோர் கேள்வி அதிகரித்தலும் சுழற்சிக் காலம் குறைவடைதலும்
(3) நுகர்வோர் கேள்வியும் முதன்மைக் காலமும் அதிகரித்தல்
(4) மறுகட்டளை மட்டமும் முதன்மைக் காலமும் அதிகரித்தல்
(5) ஆகக் குறைந்த இருப்பு மட்டம் குறைதலும் சுழற்சிக் காலம் அதிகரித்தலும் (……)

**23.** ''தர உறுதிப்பாட்டை'' சரியாகக் குறிப்பிடும் கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) சிறிய அளவினரைக் கொண்ட ஊழியர் குழுக்கள் ஒன்றுகூடி உற்பத்தித் தொடர்பான பிரச்சினைகளை கலந்துரையாடுதல்
(2) தேசிய மற்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக உற்பத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
(3) உற்பத்திச் செயன்முறையின் ஒவ்வொரு கட்டங்களிலும் உற்பத்திப்பொருளின் தரத்தை உறுதிப்படுத்துதல்.
(4) ஒவ்வொரு உற்பத்திப்பொருளும் குறைபாடுகளின்றி உற்பத்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்தல்
(5) உரிய தரப்பினருடன் உற்பத்திச் செயன்முறையின் செயற்றிறன் குறித்து தொடர்பாடுதல். (……)

**24.** உற்பத்திப்பொருளின் அல்லது சேவை ஒன்றின் 'சந்தை இடநிலைப்படுத்தல்' என்பதனால் கருதப்படுவதாவது,
(1) சந்தையில் விற்பனையின் அதிகரிப்பாகும்.
(2) சந்தைப் பங்கின் அதிகரிப்பாகும்.
(3) சந்தையில் நீண்டகால நிலைத்திருப்பாகும்.
(4) வணிகரின் தனியுரிமை சக்தி அதிகரித்தலாகும்.
(5) நுகர்வோர் மனதில் சாதகமான மனப்பாங்கைக் கட்டியெழுப்புதலாகும். (……)

**25.** கம்பனி ஒன்றின் கடந்த வருட நடைமுறை விகிதமும் விரைவு விகிதமும் முறையே 3:1 மற்றும் 2:1 ஆகும். நடப்பாண்டிற்கான நடைமுறை விகிதத்தில் எதவித மாற்றமும் இல்லாதபோதும் விரைவு விகிதமானது 1:1 ஆகும். இதனூடாக ஒப்பீட்டளவில் எடுத்துக் காட்டப்படுவதாவது;
(1) கம்பனியின் திரவத்தன்மை அதிகரிப்பு (2) இறுதி இருப்பின் பெறுமதி அதிகரிப்பு
(3) இறுதி இருப்பின் பெறுமதி குறைவு (4) கம்பனியின் திரவத்தன்மை குறைவு
(5) கம்பனியின் மொத்தப் பொறுப்புக்களில் அதிகரிப்பு (……)

**26.** பின்வருவன பல்வேறு வகையான நிதிச் சந்தைகள் ஆகும்
A - வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை B - கூட்டுரு முறிச் சந்தை
C - வணிகப் பத்திரச் சந்தை D - அந்நியச் செலாவணிச் சந்தை
E - பங்குச் சந்தை F - திறைசேரி முறிச் சந்தை

மேலே தரப்பட்டவற்றுள் மூலதனச் சந்தைக்கு மட்டும் உரித்தான தொகுதி யாது?
(1) A, B, F (2) B, D, F (3) B, E, F (4) C, D, F (5) C, E, F (……)

**27.** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்வதற்கான முறைகளையும் அவற்றின் மூலம் அளவிடக்கூடியவற்றையும் எடுத்துக் காட்டுகிறது

| முறைகள் | அளவிடக் கூடியவை |
|---|---|
| (i) விண்ணப்ப மதிப்பீடு | A - மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் |
| (ii) உளச்சார்பு பரீட்சைகள் | B - வேலைக்குரிய பொருத்தமான பணிகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றல் |
| (iii) செய்முறைப் பரீட்சைகள் | C - விண்ணப்பதாரிகளின் தகுதிகளின் பொருத்தப்பாடு |
| (iv) ஆளுமைப் பரீட்சைகள் | D - தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல் |

மேலே தரப்பட்டுள்ள முறைகளின் ஒழுங்கமைவுக்கு அமைவாக அளவிடக் கூடியவற்றை சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) B, A, C, D (2) B, C, D, A (3) C, D, A, B (4) C, D, B, A (5) D, C, A, B (……)

[ பக். 6 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**28.** ஊழியர் செயற்றிறன் மீது நிதிசார் நலன்களை வழங்குவதன் மூலம் ஏற்படக்கூடிய உடனடி விளைவானது,
(1) ஊழியர் ஊக்கம் அதிகரித்தல் (2) ஊழியர் உற்பத்தித்திறன் அதிகரித்தல்
(3) ஊழியர் கவர்ச்சி அதிகரித்தல் (4) ஊழியர் வரவின்மை குறைவடைதல்
(5) உரிமையாளர் - ஊழியர் உறவு முன்னேற்றமடைதல். (......)

**29.** 'கடமையின்போது' நிகழக்கூடிய ஊழிய ஒழுக்காற்று பிரச்சினை ஒன்று
(1) காலதாமதமாக வேலைக்கு சமூகமளித்தல்
(2) போட்டிசார் நிறுவனத்திற்காக பணி செய்தல்
(3) எவ்வித அறிவித்தலையும் வழங்காது வேலையில் இருந்து விலகுதல்
(4) அனுமதியின்றி விடுப்பு (leave) எடுத்தல்
(5) ஊழியர் மீது தாக்குதல் நடாத்துதல் (......)

**30.** கீழே தரப்படுவது முகாமைத்துவ செயன்முறையில் பயன்படுத்தும் பல்வேறு படிமுறைகள் ஆகும்.
A - கூட்டிணைத்தல் B - இலக்குகளை இனங்காணுதல்
C - பிரச்சினையை இனங்காணுதல் D - வேலையை கையளித்தல்
E - திணைக்களப்படுத்தல் F - ஊழியர் பயிற்சி
G - வளப் பகுப்பாய்வு H - திணைக்களங்களுக்கிடையிலான தொடர்பாடல்

மேலே தரப்பட்டவற்றுள் ஒழுங்கமைத்தலுடன் தொடர்புடைய படிமுறைகளை மட்டும் உள்ளடக்கியது
(1) A, B, D, E (2) A, D, E, G (3) B, E, F, H (4) D, E, G, F (5) D, E, F, H (......)

- 31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளியைப் **பொருத்தமான சொல் / சொற்களைப்** பயன்படுத்தி நிரப்புக.

**31.** (அ) தனியுடைமை வணிகமொன்றின் உடைமையானது ........................ நபரைக் கொண்டுள்ளதுடன், இவ்வாறான வணிகத்தின் கடன்கொடுத்தோர்........................ உயர்வானதாகும்.

(ஆ) பங்காளர்களின் கூட்டுப் ........................ வரையறையற்றதாகும். இதனால் இவ்வாறான வணிகங்களில் தனியுடைமையிலும் பார்க்க ........................எடுத்தல் செயன்முறையானது நீண்ட காலத்தை வேண்டி நிற்கின்றது.

**32.** (அ) அண்மித்த பணமானது ஒரு ........................ என்பதுடன் அதனை இலகுவாக காசாக மாற்ற முடிவதுடன் இது ........................ திரட்டாகவும் தொழிற்படுகின்றது.

(ஆ) நாணயத்துடன் ஒப்பிடும்போது வங்கிப் பணத்தின் ........................ குறைவாக காணப்படுவதுடன் வங்கிப் பணத்திற்கு உதாரணமாக, ........................ வைப்பை குறிப்பிட முடியும்.

**33.** (அ) கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் பிரதான தொழிற்பாடு கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களிடமிருந்து ........................ சேகரிப்பதும் கிராமிய ........................வலுவான நிறுவனம் சார்ந்த ஆதரவை வழங்குவதும் ஆகும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர்களாக தொழிற்படுவதற்கு தகுதியுடைய இரு வகையான நிறுவனங்கள் ........................ வணிக வங்கிகளும் ........................ முதனிலை விநியோகக் கம்பனிகளும் ஆகும்.

**34.** (அ) இலத்திரனியல் வங்கியியல் முறைமையானது வாடிக்கையாளர்கள் தமது ........................ ஆரம்பிப்பதற்கும் நிதிசார் ........................ நிறைவேற்றுவதற்கும் வசதியளிக்கின்றது.

(ஆ) இலங்கையில் அரசாங்கத் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவகம் ........................ என்பதுடன் அதன் தொலைபேசி இலக்கம் ........................ ஆகும்.

**35.** (அ) ஏற்றுமதி விவசாய உற்பத்திப்பொருட்களின் நுகர்வுக்கான பொருத்தப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுமதி நாட்டின் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவகத்தால் வழங்கப்படும் ஆவணம் ........................ சான்றிதழ் என்பதுடன் கப்பலேற்றுகைக்காக பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் கப்பலேற்றுகை நிறுவனத்தால் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் ஆவணம் ........................ ஆகும்.

(ஆ) வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் உள்ளூர் கைத்தொழில்களை ........................ அரசாங்கமானது இறக்குமதிகளின் மீது ........................ விதிக்கின்றது.

**36.** (அ) தொழிற் பிரிப்பின் காரணமாக ........................ ஏற்படுவதுடன் அதன் மூலம் ஊழியர்களின் ........................ அதிகரிக்கும்.

(ஆ) விளம்பரங்களை அச்சிடுதல் ........................ உற்பத்தி முறைக்கு உதாரணம் என்பதுடன் தனிப்பட்டவர்களுக்கான ஆடைகளை தைத்தல் ........................ உற்பத்தி முறைக்கு உதாரணம் ஆகும்.

[ பக். 7 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**37.** (அ) ISO ................. நியமமானது சூழல்சார் முகாமைத்துவத்துக்கு உரியதென்பதுடன், ISO 9001 நியமமானது .................முகாமைத்துவத்துக்கு உரியதாகும்.

(ஆ) தகவல் முறைமையின் சகல பௌதீகக் கூறுகளும் ...........................என்பதுடன் தரவு செயன்முறைப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் கணினி நிகழ்ச்சித் திட்டம்............................... ஆகும்.

**38.** (அ) பொருட்கள் சேவைகளை நுகர்வதன் மூலம் நுகர்வோர் ................................. பெற்றுக் கொள்வதுடன் அது ...................... எனப்படுகிறது.

(ஆ) .............................. சிறந்த சேவையை வழங்குவதற்காக நிறுவனமொன்றின் சகல ஊழியர்களாலும் மேற்கொள்ளப்படும் கூட்டுமுயற்சி................................ சந்தைப்படுத்தல் என அழைக்கப்படும்.

**39.** (அ) தொகுதிக் கடன்களுக்கு ஒரு நிலையான வீதத்தில் .......................... செலுத்த வேண்டும் என்பதுடன் சாதாரண பங்குகளுக்கு மாறுபட்ட வீதத்தில் ........................ செலுத்த வேண்டியுள்ளது.

(ஆ) நிறுவனமொன்றின் தற்போதைய வேலைச் செயற்றிறனை அதிகரிப்பதாக ஊழிய .................. காணப்படுகின்ற அதேவேளை எதிர்கால செயற்றிறனை மையப்படுத்தியதாக ஊழியர் ........................ காணப்படுகிறது.

**40.** (அ) உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடும்போது நிதி முகாமையாளரது சம்பளமானது .............. கிரயமாக வகைப்படுத்தப்படும் அதே வேளை உற்பத்தி ஊழியர்களது சம்பளமானது .................... கிரயமாக வகைப்படுத்தப்படுகின்றது.

(ஆ) நிறுவனமொன்றின் பல்வேறு பிரிவுகளுக்கும் பதவி நிலைகளுக்கும் இடையிலான இடைத் தொடர்பை அமைப்பு ...................... எடுத்துக்காட்டும் அதேவேளை அவற்றை நிறுவன ................................ மூலம் சுருக்கிக்காட்ட முடியும்.

- **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்கு **மிகப் பொருத்தமான விடைகளை** தரப்பட்டுள்ள இடைவெளிகளில் எழுதுக.

**41.** வணிகங்கள் மனித விருப்பங்களை பூர்த்தி செய்யும் **நான்கு** வழிகளை குறிப்பிடுக.

(1) ..............................................................................................................
(2) ..............................................................................................................
(3) ..............................................................................................................
(4) ..............................................................................................................

**42.** வணிக ஒழுக்கங்களைப் பின்பற்றுவது எவ்வகையில் வணிகங்களுக்கு முக்கியமானது என்பதற்கான **நான்கு** காரணங்களைப் பட்டியலிடுக.

(1) ..............................................................................................................
(2) ..............................................................................................................
(3) ..............................................................................................................
(4) ..............................................................................................................

**43.** வணிகமொன்று நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் பிரதான நோக்கங்கள் **நான்கினைத்** தருக.

(1) ..............................................................................................................
(2) ..............................................................................................................
(3) ..............................................................................................................
(4) ..............................................................................................................

**44.** வரையறுத்த தனியார் கம்பனிகளில் காணக்கூடிய வரையறைகள் **நான்கினை** எழுதுக.

(1) ..............................................................................................................
(2) ..............................................................................................................
(3) ..............................................................................................................
(4) ..............................................................................................................

[ பக். 8 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**45.** சிறிய மற்றும் நடுத்தர அளவு (SMEs) வணிகங்களின் வெற்றிக்கு முயற்சியாண்மை ஏன் முக்கியமானது என்பதற்கு **நான்கு** காரணங்கள் தருக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

(3) ..............................................................................................

(4) ..............................................................................................

**46.** பின்வரும் விவரணங்களுக்கு பொருத்தமான போக்குவரத்து வழங்கல் சேவை அல்லது அமையவியல் (logistics) முறைமையினைப் பெயரிடுக.

| **விவரணங்கள்** | **போக்குவரத்து வழங்கல் சேவை / அமையவியல் முறைமை** |
|---|---|
| 1. கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை நுகர்வோருக்கு வழங்குதல் | 1 .............................................. |
| 2. உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளல் | 2. .............................................. |
| 3. இறுதிப் பாவனையாளருக்கு உற்பத்திப் பொருட்களை வழங்குதல் | 3. .............................................. |
| 4. பயன்படுத்திய உற்பத்திப்பொருட்களை உற்பத்தியாளருக்கு திருப்பி அனுப்புதல் | 4. .............................................. |

**47.** வரையறுத்த பொதுக் கம்பனிகளால் பயன்படுத்தப்படும் நிதி மூலங்களுக்கு அமைவாக பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

| **உள்வாரி மூலம்** | **வெளிவாரி மூலம்** |
|---|---|
| 1. .............................................. | 1. .............................................. |
| 2. .............................................. | 2. .............................................. |

**48.** வணிக நடவடிக்கைகளுக்காக இணையத்தைப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** வழிகளை எழுதுக.

(1) ..............................................................................................

(2) ..............................................................................................

(3) ..............................................................................................

(4) ..............................................................................................

**49.** வணிகத் திட்டம் ஒன்றை தயாரிக்கும்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் **நான்கினை** எழுதுக.

1) ..............................................................................................

(2) ..............................................................................................


(3) ..............................................................................................

4) ..............................................................................................

**50.** இணைய வழி மூலமான கொள்வனவுச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் பின்வரும் ஒவ்வொரு குறியீடுகள் மூலமும் வெளிப்படுத்தப்படும் கருத்தினை எழுதுக

(1)  ................................

(2)  ................................

(3)  ................................

(4)  ................................

* * *

More Past Papers at tamilguru.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ව්‍යාපාර අධ්‍යයනය II
**வணிகக் கல்வி II**
Business Studies II

**32 T II**

පැය තුනයි
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

* ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. அஸ்வினி என்பவர் தொழில்சார் கற்கைநெறியொன்றைப் பூர்த்தி செய்ததன் பின்னர் 'ஆர்த்தி' எனும் பெயரில் அழகுக்கலை நிலையம் ஒன்றை ஆரம்பித்ததுடன் அதன் முகாமையாளராக அமரன் என்பவரை நியமித்தார். அஸ்வினி கடனாகப் பெற்றுக்கொண்ட ரூ. 500 000 ஐயும் தனது சேமிப்பில் இருந்து ரூ. 200 000 ஐயும் வணிகத்தில் முதலீடு செய்துள்ளார். இவர் இவ்வணிகத்துக்காக ரூ. 600 000 பெறுமதியான கட்டடமொன்றைக் கொள்வனவு செய்ததுடன் மிகவும் தரம் வாய்ந்த சேவையை வழங்குவதற்காக நவீன உபகரணங்களை இறக்குமதி செய்ய மீதிப் பணத்தைச் செலவிட்டார். அஸ்வினியும் அவரது பயிற்றப்பட்ட ஊழியர் குழாமும் வாடிக்கையாளர்களது வசதியைக் கருத்திற் கொண்டு அவர்களது வீடுகளுக்குச் செல்வதன் மூலமோ அல்லது அழகுக்கலை நிலையத்திலோ தமது சேவைகளை வழங்குவதற்கு எந்நேரத்திலும் தயாராக இருந்தனர்.

(i) பின்வரும் நியதிகளுக்கமைவாக இந்த வணிகத்தை வகைப்படுத்துக.

(அ) உடைமை : ..........................................................

(ஆ) நோக்கம் : ..........................................................

(இ) அளவு : ..........................................................

(ஈ) உற்பத்தித் துறை : ..........................................................

(04 புள்ளிகள்)

(ii) (அ) அஸ்வினியின் வணிகமானது நபர் ஒருவரின் தேவையையா அல்லது விருப்பத்தையா பூர்த்தி செய்கின்றது என்பதனைச் சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) விலை நீங்கலாக நுகர்வோரது கேள்வியினை அதிகரிக்கச் செய்வதற்கு அஸ்வினி பயன்படுத்தும் வேறு நுட்பங்கள் **இரண்டினைப்** பெயரிட்டு, விவரிக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) இவ்வணிகத்தின் பலங்கள் **இரண்டினையும்** பலவீனங்கள் **இரண்டினையும்** பட்டியலிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) அஸ்வினியின் வணிகமானது குறித்த தொழில்துறையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வழிகள் **இரண்டினை** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) இவ்வாறான வணிகங்களில் காணப்படக்கூடிய வரையறைகள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) அஸ்வினியின் வணிகத்தில் முயற்சியாண்மைக்கு மேலதிகமாக ஈடுபடுத்தப் பட்டிருக்கும் வளங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) அஸ்வினியின் முயற்சியாண்மைசார் குணாம்சங்களையும் திறன்களையும் மேலும் முன்னேற்றக்கூடிய **நான்கு** வழிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக் 2 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

2\. (i) (அ) முறைகேடான வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் உம்மால் முறைப்பாடு செய்யக்கூடிய வகையில் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நிறுவகங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் முறைகேடான வியாபார நடவடிக்கைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) 'முறைசார்ந்த நிறுவனம்' என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) பொது வரையறுத்த கம்பனிகளது குணாம்சங்கள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) 'அங்கீகார வணிகங்கள்' என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) பட்டியல்படுத்தப்பட்ட பொதுக் கம்பனி ஒன்று பட்டியல்படுத்தப்படாத பொதுக் கம்பனியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(iv) கீர்த்தி என்பவர் உள்ளூர் விநியோகத்தர்களிடமிருந்து மீன்களைக் கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்யும் வணிகம் ஒன்றை நடாத்துகின்றார். கொவிட் 19 தொற்று நோய் காரணமாக மீனின் ஏற்றுமதி விலையானது கிலோ ஒன்றுக்கு 16 அமெரிக்க டொலரில் இருந்து 6 அமெரிக்க டொலராகக் குறைவடைந்தது. இதனால் கீர்த்தி தமது வணிகத்தை மூடிவிடுவதற்குத் தீர்மானித்தார். ஆனால் ஊழியர்களும் அப்பிரதேச மக்களும் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பினைக் காட்டினர்.

(அ) இந்த வணிகத்தின் 'சமூகப் பொறுப்பு' என்பதனால் கருதப்படுவது யாது? (01 புள்ளி)

(ஆ) மேற்குறித்த வணிகத்தின் மீது அக்கறையுடைய **மூன்று** தரப்பினரைக் குறிப்பிடுவதுடன், அந்த ஒவ்வொரு தரப்பினரதும் அக்கறைக்கான காரணம் ஒவ்வொன்றையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(v) சந்தையில் பகுத்தறிவுள்ள நுகர்வோர் ஒருவர் நடந்து கொள்ளும் விதத்தை **நான்கு** காரணங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3\. அரசாங்கத்தினால் நடாத்திச் செல்லப்படுகின்ற விமான சேவை நிறுவனமொன்று தனது சந்தைப் பங்கை அதிகரித்துக் கொள்ளும் உள்நோக்கத்துடன் 'எயார் அல்பா' எனும் தனியார் விமான சேவை நிறுவனத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

(i) (அ) 'வணிக இணைப்பு' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) மேற்குறித்த இரண்டு கம்பனிகளுக்கிடையேயும் இடம்பெற்ற இணைப்பு வகையைப் பெயரிடுவதுடன், அம்மாதிரியான இணைப்பு வகையைப் பற்றி விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) குத்தகைக் கம்பனிகளின் மூலம் வணிகர் ஒருவருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் முகவர் நடவடிக்கைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் **இரண்டினை** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) 'லங்கா தீர்வு' (Lanka settle) முறைமையின் பிரதான தீர்வு முறைமைகள் **இரண்டினையும்** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) ஆகாயப் போக்குவரத்து, பொருளாதாரத்திற்கு முக்கியமானதாக அமையும் விதம் தொடர்பாக **இரண்டு** காரணங்களை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் வீதிப் போக்குவரத்துத் துறையில் காணத்தக்க தற்போதைய போக்குகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விவரிக்குக. (02 புள்ளிகள்)

(v) சிறிய, நடுத்தர அளவு நிறுவனங்களை வரையறை செய்வதில் 'அளவுசார் காரணிகள்' என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விளக்கி, அதற்கு **இரண்டு** உதாரணங்கள் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4\. (i) (அ) 'நாணயக் கடிதம்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பின் (SAARC) ஒத்துழைப்பு நடவடிக்கைத் துறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) ஊழியர் சேமலாப நிதியத்துக்கு (EPF) பங்களிப்புச் செய்ய வேண்டிய தரப்பினரைக் குறிப்பிட்டு, அவர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டிய ஆகக் குறைந்த சதவீதங்களையும் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) காப்புறுதி **செய்யத்தகாத** இடர்களை இனங்காணக்கூடிய வழிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

[பக் 3 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

(iii) (அ) காசோலை ஒன்றினை எழுதும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வரையறையுடனான சாட்டுதலின் முக்கியத்துவத்தினை **இரண்டு** காரணங்களூடாகச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) 'பொதுப் (General) பொறுப்புக் காப்புறுதி' என்பதனால் கருதப்படுவது யாது? (01 புள்ளி)

(ஆ) வணிக நடவடிக்கைகளுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவத்தினை **மூன்று** காரணங்களூடாக விளக்குக. (03 புள்ளிகள்)

(v) வணிகமொன்றுக்கு 'பட்டைக் குறியீடுகள்' (Barcodes) முக்கியமானதாய் அமைவது ஏன் என்பதனை **நான்கு** காரணங்களூடாக விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

**5.** (i) (அ) 'நிறுவனம்' என்றால் என்ன என்பதனை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) 'பயனுறுதி', 'வினைத்திறன்' ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பினை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) நிறுவனமொன்று பன்முகப்படுத்தலின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) கட்டுப்பாட்டுச் செயன்முறையின் முக்கியத்துவம் பற்றி **நான்கு** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) உற்பத்திப்பொருளொன்றின் 'சேர்க்கப்பட்ட பெறுமதி' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) 'கலத் தளவமைப்பு' என்பதனை உதாரணம் ஒன்றினூடாக சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) திட்டமிடல் செயன்முறையில் வளப் பகுப்பாய்வினால் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (01 புள்ளி)

(ஆ) உயர் மட்ட முகாமையாளர்களுக்கு எண்ணக்கருவாக்கத் திறன்கள் ஏன் மிகவும் முக்கியமானது என்பதனை **இரண்டு** காரணங்களைக் குறிப்பிட்டு, விளக்குக. (03 புள்ளிகள்)

(v) சரவணாஸ் சப்பாத்து உற்பத்திக் கம்பனியின் உண்மையான மற்றும் எதிர்வுகூறப்பட்ட விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2020 (உண்மையான) | 2021 (எதிர்வுகூறப்பட்ட) |
|---|---|---|
| சப்பாத்துச் சோடிகள் (அலகுகள்) | 500 | 1000 |
| நிலையான கிரயம் | ரூ. 212 000 | 50% ஆல் அதிகரிக்கப்பட்டது. |
| மாறும் கிரயம் (சப்பாத்துச் சோடி ஒன்றின்) | ரூ. 200 | ரூ. 200 |
| விற்பனை விலை (சப்பாத்துச் சோடி ஒன்றின்) | ரூ. 730 | ரூ. 730 |

2021 ஆம் ஆண்டிற்குரிய பின்வருவனவற்றினைக் கணிப்பிடுக.

(அ) மொத்த உற்பத்திக் கிரயம்

(ஆ) சப்பாத்துச் சோடி ஒன்றின் உற்பத்திக் கிரயம்

(இ) தொகைகளில் சமப்பாட்டுப் புள்ளி

(ஈ) 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சமப்பாட்டுத் தொகையின் வேறுபாடு (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** (i) (அ) புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது வணிகமொன்று முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) விசேட பண்டங்களிலிருந்து கடைப் பண்டங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதனை உதாரணத்துடன் விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) வணிகரொருவர் தனது பொருட்களுக்கான விலையை போட்டியாளர்களை விட 20% குறைவாகத் தீர்மானித்தார்.

(அ) மேற்குறித்த விலையிடல் முறையின் பிரதான நோக்கம் என்ன? (01 புள்ளி)

(ஆ) குறித்த விலையிடல் முறையைப் பயன்படுத்துவதன் மூலம் வணிகரின் மொத்த இலாபத்தின் மீது ஏற்படும் தாக்கத்தினைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

[பக் 4 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

(iii) (அ) வியாபார மேம்படுத்தலின் மூலம் வணிகமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) "நுகர்வுப் பண்டங்களின் தன்மைக்கேற்ப அவற்றின் விநியோக வழிமுறைகள் வேறுபடும்." இக் கூற்றை **இரண்டு** உதாரணங்களூடாக விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) நிதி முகாமைத்துவத்தின் **நான்கு** நோக்கங்களைப் பட்டியலிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பயனுறுதியான நிதி முகாமைத்துவத்தினூடாக பங்குதாரர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினை** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(v) சந்தைத் துண்டமாக்கலின் ஊடாக வணிகரொருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கினை** விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**7.** (i) வழங்கப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் ஒவ்வொரு விகிதங்களையும் கணிப்பிடுக.

| | ரூ. |
|---|---|
| தேறிய இலாபம் (வரிக்கு முன்னர்) | 60 000 |
| முன்னுரிமைப் பங்கிலாபம் | 15 000 |
| முன்னுரிமைப் பங்குகள் | 200 000 |
| சாதாரண பங்குகள் | 300 000 |
| விற்பனைகள் | 100 000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 10 000 |
| கடன் வட்டி | 5 000 |

More Past Papers at
tamilguru.lk

(அ) தேறிய இலாப விகிதம்
(ஆ) உரிமை மீதான திரும்பல் விகிதம்
(இ) கடன் உரிமை விகிதம்
(ஈ) வட்டிக் காப்பு விகிதம்
(04 புள்ளிகள்)

(ii) (அ) 'ஒதுக்கங்களை மூலதனமாக்குதல்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) அரசாங்கப் பிணைப் பத்திரங்களில் முதலீடு செய்வதனால் முதலீட்டாளருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) முதலீட்டாளர்களுக்கு பங்கு விலைச் சுட்டிகள் முக்கியத்துவமுடையதாய் அமைவதற்குரிய காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) தற்காலிக அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் வணிகமொன்றுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினை** விவரிக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) செயற்றிறன் மதிப்பீட்டின் பின்னர் ஊழியர் அசைவினை (employee mobility) ஏற்படுத்தக்கூடிய விதங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'ஊழியர் வரவின்மை', 'ஊழியர் புரள்வு' ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) நிறுவனமொன்றின் மனித வளக் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **நான்கினை** விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**8.** (i) (அ) வணிகர் ஒருவருக்கு இணைய வங்கிச் சேவை மூலம் கிடைக்கும் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் பட்டியலிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'கணினி பாதுகாப்பு அச்சுறுத்தல்' என்பதனை இனங்கண்டு, அவ்வாறான **இரண்டு** அச்சுறுத்தல்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) பயனுறுதியான தகவல் முறைமையின் மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கும் தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியர்கள் அறிவு மட்ட தகவல் முறைமையை எந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்துகின்றனர் என்பதனை விவரிக்குக. (02 புள்ளிகள்)

(iii) (அ) வணிகமொன்றுக்கு நிதித் திட்டமிடல் முக்கியமானதாக அமையும் விதத்தை **இரண்டு** காரணங்களூடாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) முயற்சியாளர் ஒருவருக்கு மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் எவ்வாறு முக்கியத்துவமுடையது என்பதனை **நான்கு** காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) வணிகமொன்றின் தொழிற்படு மூலதனத்தை அதிகரித்துக் கொள்ளத்தக்க வழிகள் **இரண்டினை** எழுதுக. (01 புள்ளி)

(ஆ) கொழும்பு பங்கு பரிமாற்றகத்தில் பட்டியற்படுத்தப்பட்ட கம்பனி ஒன்றை பட்டியலில் இருந்து நீக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (03 புள்ளிகள்)

(v) ஒருவர் தனது பணத்தின் ஒரு பகுதியை பங்குச் சந்தையில் அல்லது வணிக வங்கி ஒன்றின் நிலையான வைப்பில் முதலீடு செய்ய எதிர்பார்க்கிறார். இந்த ஒவ்வொரு முறையினதும் அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

More Past Papers at tamilguru.lk